மகிமையின்


# செங்கோல்

MAGIMAYIN SENGOL

சிங்காசனம் 10 செங்கோல் 7

# இனிய இல்லறம்

தொடங்கும் முன் அல்லது
தொடங்கியப் பின் வாசிக்கவும்




S. சந்திரசேகரன்



குளோரி

திருமண தகவல் நிலையம்

அன்புடன் வரவேற்கிறது

GLORY MARRIAGE CENTRE

❖ மணவாழ்விற்க ஏற்ற துணை காண பதிவு செய்து பயணடைவீர்





❖ திருமண பதிவேடு (Marriage Registrar) தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுங்கள்





❖ கல்யாணத்திற்கான அனைத்து உதவிகளும் செய்ய ஆயத்தமாக இருக்கிறோம் (அயல் நாடுகளில் உள்ளவர்களுக்கும் உதவுகிறோம்.





...."மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியா யிருப்பது போல, உன் தேவன் உன் மேல் மகிழ்ச்சியா யிருப்பார்"

*ஏசாயா 62:5*



உமது ராஜ்ஜியத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது சங்கீதம் 45:6

# மகிமையின் செங்கோல்

உங்களை மறுரூபமாக்கும்

சிங்காசனம்-10 செங்கோல் 7 ஜுலை 2007

**ஆசிரியர்**
சே. சந்திரசேகரன்

**இதழ் தயாரிப்பு**
Mrs.ஹேமாவதிபால்

**நிர்வாகம் & புகைப்படங்கள்**
Miss.சீதா தேவி

**இதழ் வடிவமைப்பு**
Mr.விக்டர்




**நேர் வழியாய் நம்மை நடத்தும்**
**தேவனுக்கு ஸ்தோத்திரம்!**

*இப்புத்தகத்தில் குறைகள் இருந்தால்*
*என்னை திருத்துங்கள் குழந்தை*
*என்று என்னைக் கொள்ளுங்கள்*
*நிறைகள் இருந்தால் அது தேவனின்*
*அருளைத்தந்தது*
*அவருக்கே மகிமை என்று*
*முறை செய்யுங்கள்!*
*எந்த நிலையிலும் யாரையும்*
*குற்றப்படுத்துவதும், குறை சொல்லுவதும்*
*எனது நோக்கமல்ல*
*சகலவற்றையும் சோதித்து*
*நலமானதை பிடித்துக்கொள்ளுவோம்.*
*சுகமாய் இருப்பீர்களாக!*



உள்ளடக்கம்

ஆசிரியர் கடிதம்
ஏற்றத் துணை
அலுவலகத்தில் தர வேண்டிய
ஆவணங்கள்
சான்றிதழின் வடிவம்
ஒருமணமா? இருமணமா?
சண்டைகள், சங்கடங்கள்
திருமணத் திட்டமிடல்
பிரச்சனைகள் தீர்க்க திருசபைகளின் பங்கு
திருமண தகவல் முகவரிகள்
உதவி செய்கிறோம் உங்களுக்கு

[redacted]

# Glroy Marriage Breaue

## ஏன் இந்த ஊழியம் செய்கிறோம்?

ஏற்ற துணையை உண்டாக்குவேன் ஆதியாகமம் 2:18-ம் வசனத்தை வாக்குத்தத்தமாக கொண்டு இவ்வூழி யத்தை 1994 ஆம் ஆண்டு ஆரம்பித் தேன்.

நான் புற மதத்திலிருந்து இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். அதன் விளைவாக வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

எனக்கு வயது முப்பது ஆன போதும் எனது திருமணத்திற்கான முயற்சிகள் எடுத்து அன்போடு கூட இருந்து ஆலோசனை கொடுக்கவோ, நேர்வழியாய் நடத்தி செல்லவோ ஒருவரும் இல்லை. நான் பட்ட பாடுகளும் விட்ட கண்ணீரும் ஏராளம். தனிமையில் என் தவிப்புகளோடு ஜெபித்தேன். ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் பெண் தேடும் படலம் எனக்கு நடந்தது.

அந்த நேரத்தில் நான் 25 பேர் உள்ள சபைக்கு மேய்ப்பனாக இருந்தேன். ஆண்டவரே! நான் சபையாகிய மணவாட்டியை உமக்கு ஆயுத்தப்படுத்தி தந்தேன். அது போல எனக்கு மணவாட்டியை தாரும் என என் தனி ஜெபத்தில் கேட்டேன்.

நீ எனக்கு நல்ல மணவாட்டியை தரும்போது நானும் என் போன்ற கஷ்டத்தில் உள்ளவர்களுக்கு உதவுவேன் என்று கண்ணீரோடு வேண்டுதல் செய்தேன்.

நம்முடைய ஏக்கங்களையும், தவிப்பையும் அறிந்திருக்கிற ஆண்டவர் எனக்கு நல்ல மனைவியைத் தந்தார். தேவன் என்னை நேசித்த அன்பிற்கு அடையாளமாய் இரு பெண் பிள்ளைகளையும் தந்தார். அல்லேலூயா!

அதன் பலனாகத்தான் திருமண தகவல் ஊழியங்களை அர்பணிப் போடு தொடங்கினேன்.

## எப்படி இந்த ஊழியம் செய்கிறோம்?

என்னை வாழவைத்த இயேசு பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் உள்ள முழு குடும்பத்திற்கும் பொறுப்புள்ள தேவனாய் இருக்கிறார்.

கடந்த 12 ஆண்டுகளில் 100-க்கும் மேற்பட்ட திருமணங்களை நடத்தி வைக்கும் பாக்கியத்தை தந்தார். இந்த ஆண்டு தொடங்கி 7 மாதத்திற்குள் 25 திருமணங்கள் நடந்து முடிந்துள்ளது. இந்த ஊழியத்தை பதினோராம் மணி ஊழியத்துடன் சேர்த்து அரசாங்கத்தில் முறைப்படி பதிவு செய்துள்ளேன். **இந்திய திருமண பதிவாளராக அரசாங் கத்தில் அங்கீகரிக் கப்பட்டுள்ளேன்.**





மட்டுமல்ல அயல் நாடுகளில் (Foreign Country) இலங்கை, தமிழ் விசுவாசிகளுக்கும் திருமணங்களை இந்தி யாவில் நடத்தி வைக்கிறோம். எப்போதும் திரு மணத்திற்கான எவ்வித உதவியும் செய்ய ஆயத்தமாக உள்ளோம்.

இத்திருமண ஊழியங்களை எல்லா ராலும் எடுத்து செய்ய இயலுவ தில்லை. இதற்கென வரம் பெற்றவர் களும், வல்லமை நிறைந்த தேவதாசர் களும் தேவையாய் இருக்கிறது. வீட்டை கூட கட்டிப் பார்த்துவிட லாம். தற்போது உள்ள சூழ்நிலையில் திருமணம் செய்து பார்ப்பதற்கு.... தேவ கிருபையும், தேவ வழி நடத்து தலும் அதிக அவசியமாய் இருக்கிறது.

ஆகவே, உங்களால் இயன்ற வரை இது போன்ற ஊழியங் களுக்கு மனப் பூர்வமாக உதவி செய்யுங்கள். கணக்குக்கு பலன் மிகுதியாய் இருக்கும், கர்த்தரின் ஆசிர்வாதத்தால் நிறைந்திருப்பீர்கள்.

*கிறிஸ்துவுக்குள் அறியாத*
*அன்புடனே அன்புகூரும்*
*எஸ். சந்திரசேகரன்*

## உதவி வேண்டும் எங்களுக்கு

- திருமண பதிவு நிலையத்திற்கு ஒரு கணனி (Computer) தேவையாக இருக்கிறது. இதன் மூலம் மற்றவர்களுடன் தகவல் பரிமாறிக் கொள்ள, மிகவும் உதவியாக இருக்கும்.
- ஏழ்மையில் உள்ளவர்களுக்கு திருமணம் நடைபெற பண உதவிகள் செய்தால் அவர்கள் காத்திருத்தல் சீக்கிரம் முடிவடையும்
- பெண், மாப்பிள்ளை தேடுவோருக்கான அனைத்து விரவங்களுடன் தொகுத்து ஒரு புத்தகம் வெளியிட ஆயத்தமாக இருக்கிறோம். உங்கள் திருமண நாள், குடும்பத்தின் சார்பில் நீங்கள் அதை வெளியிட முன் வரலாம். தொடர்பு கொண்டால் புத்தகத்தில் நகல்களை (Xerox Copy) தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்
- உங்கள் பண உதவி கர்ததருடைய ராஜ்யத்தை அதிகமாய் கட்டி எழுப்ப பேருதவியாக இருக்கும்.
- கர்த்தர் உங்கள் குடும்ங்களை தழைக்க செய்வாராக!

# ஏற்ற துணை வேண்டுமா?

ஏற்ற துணை வேண்டும் தானே? உலகத்தவரே சொல்கிறார்கள். "பருவத்தே பயிர் செய்" என்று..., நம் தேவனும் அதினதின் காலத்தில் நேர்த்தி யாய் செய்கிறவராயிற்றே!

துணையை கண்டுபிடிப்பது வேறு! ஏற்ற துணையைக் கண்டுபிடிப்பது வேறு. யாரைத் துணையாய் ஏற்றுக் கொள்ளப் போகிறோம் என்பது தான் வாழ்வில் எடுக்கும் முக்கியமான தீர்மானம். இந்த மையப் புள்ளி சரியாக அமைந்தால் தான் எதுவுமே சரியாக அமையும்.

ஆகவே திருமணத்திற்காக மாப்பிள்ளை, பெண் பார்க்க போகும் முன்னர் இந்த தேவ செய்தியை வாசித்து இருதயத்தில் வைத்து சிந்தனை செய்வது சிறப்பாக அமையும்.

## A for Age: வயது

திருமண எண்ணம் ஆரம்பத்தில் யாருக்கு வருகிறதோ அவர்கள் முதலில் மனதளவில் பக்குவப்பட்டவர் களாக இருப்பது அவசியம்.

பெற்றோர் என்ன சொல்கிறார்கள்? வயது ஆகிக்கொண்டே போகிறது இன்னும் சின்ன பிள்ளை மா திரி இருக்கிறானே! இவனுக்கு ஒரு கால் கட்டு போட் டால் எல்லாம் சரியாகி விடும் என் கிறார்கள்.



ஆணாகிலும் சரி! பெண்ணாகிலும் சரி குடும்ப வாழ்விற்குள் நுழைய வேண்டுமாயின் அதற்கு வயது மட்டும் ஒரு தகுதி ஆகாது. அது அடிப்படைத் தகுதியாக இருக்கலாம். ஆனால் வயதாகி விட்டது என்பதற்காக கால் கட்டு போட போய்; பிறகு அந்த வாழ்வே ஒரு கட்டு போட்ட காலாகி விடும்.

முப்பது வயதிற்கு மேல் துணையை தேடுகிறவர்கள் எதுக் கெடுத்தாலும் தத்துவமும், சித்தாந்தமும் பேசிக் கொண்டு இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் காரியத்துக்கு உதவாத வைத்தியர்களாகி விடுகிறார்கள். *30* வயதிற்கு மேலாகி விட்டால் வளைக்க முடிவதில்லை. மீறி நாம் வளைத்தால் வளையாது. மாறாக ஒடித்துக் கொள்ளும் பக்குவம் வந்து விடுகிறது.

*21* லிருந்து *25*க்குள் சின்ன சிறு வயதில் அறியாத பருவமும், துள்ளித் திரியும் காலமும், மனதில் ஒரு உற்சாக வேகமும் உள்ள நேரங்கள்... அந்த கால கட்டங்கள் ஓடுகிற பாம்பை மிதிக்கிற வயது. பிரச்சனைகளை எதிர்கொண்டு ஊதித்தள்ள இலகுவாய் இருக்கும்.

இருவருக்கும் வயது வித்தியாசங்கள் அதிகமாய் இல்லாதபடி பார்ப்பது நல்லது. சரீர வளர்ச்சி வேறு, அறிவுக்குரிய முதிர்ச்சி வேறு. ஆவிக்குரிய பக்குவம் என்பது எல்லாம் வயதிற்கு ஏற்றார் போல் அமையும், அனுபவங்களும் படிப்பும் அதற்கேற்ற பொருத்தத்தை தரும்.



## B for Beauty:அழகு

அழகுன்னா ஆபத்து; அன்பு தான் நம் சொத்து என்று வாலிபன் ஒருவன் சொல்லக் கேட்டேன். அது தான் அதிக உண்மை என்பது அநேகருக்கு திருமணத் திற்கு பிறகே புரிகிறது.

இவர்கள் தோற்றம் அசிங்கமாக இருந்தாலும் அதைப் பற்றி கவலைப் படுவது இல்லை. ஆனால் தனக்கு வாழ்க்கைத் துணையாக வருகிறவள் தேவதையைப் போல் தோற்றம் இருக்க வேண்டும் என்று கனவுலகில் சஞ்சரிக்கிறார்கள்.

அழகும் வீண், சௌந்தரியமும் வஞ்சனை உள்ளது என்று சொல்லும் நீதிமொழிகள் *31.30* வசனத்தை வாசிக்காததால் குழம்பிபோய்விடுகிறார்கள்.

கலராக, கண்ணம், கழுத்து, இடுப்பு, முகம், மூக்கு என ஒவ்வொன்றாக முடிவு செய்வதற்குள் இவர்களது முடி கொட்ட ஆரம்பித்து விடுகிறது. ஆரம்பத்தில் சொன்ன அத்தனை குறிப்பும் போய் கல்யாணத்திற்கு பெண் கிடைத்தால் போதும், பையன் கிடைத்தால் போதும் என்று இறங்கி வருவதற்குள் வருடங்கள் ஓடிவிடுகிறது.

எல்லோரிலும் தேவ சாயல், தேவ ரூபம் உள்ளது. ஆதாமுக்கு ஒரு துணையை தான் தேவன் அழைத்து வந்து தந்தார். ஒரு Aவாள், Bவாள், Cவாள், Dவாள் என்று நான்கு பெண்களைக் கொண்டு வந்து காட்டி முடிவு எடுக்கச் சொல்ல வில்லை.



இவர்களும் ஏறாத இடம் இல்லை, பதிவு செய்யாத இடமும் இல்லை; எல்லோரிடமும் சொல்லி வைத்து விட்டார்கள். நான்கு ஜோடி பாதரட் சைகள் பழுதாகிவிட்டது. ஆனாலும் குழப்பம் தீரவில்லை ஏன்? குங்குமப்பூ கலரில் பெண் வேண்டும்: பூசினார் போல் இருக்க வேண்டும். சுண்டினால் இரத்தம் வரும் கலர் அவசியம் என்று கூறியவர்க்ள தனது தேவசாயலை தொலைத்து விட்டார் கள்.

அவரவர் தகுதியை விட அதிகமாய் எதிர்பார்த்து ஏமாந்து போகிறவர்கள். இவர்கள் ஏமாற்றப்பட்டோம் என்று புரிவதற்குள் எல்லாம் முடிந்து விடுகிறது.

## C for Caste : ஜாதி

எல்லா பிசாசிலும் மோசமானது ஜாதிப் பிசாசு என்றார் ஒரு தேவ மனிதன். எத்தனை உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் அதைத் துரத்த முடியாமல்.... ஜாதிப் பிசாசு அநேகரை பிடித்து பித்து பிடிக்க வைக்கிறது.

கேட்டால் ஆபிரகாம் என்ன செய்தார்? என்று இந்த ஜாதி பிசாசுகள் தங்களுடைய சுய இச்சைக்கு ஏற்றாற் போல் வேதத்திலிருந்து மேற்கோள் களைக் காட்டும்.

புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்படும் வாலிப ஆண், பெண் பிள்ளைகளுக்கு பரிசுத்த ஜாதியில் தான் (இரட்சிப்பின் அனுபவத்தில் வந்தவர்கள்) ஏற்ற துணையை எடுக்க வேண்டும். மறுபடியும் அதே ஜாதியைத் தேடித் திரிந்தால் இரட்சிப்பில் எங்கோ கோளாறு இருக்கிறது என்று பொருள்.

ஜாதியை பார்க்கிற இவர்கள் பரலோகத்திற்கு ஒரு வேளை போக நேர்ந்தால், அங்கு எல்லா ஜாதிக்காரர்களோடும் இருந்தாக வேண்டும். ஆகவே சத்தியத்தைக் கைக்கொண்டு நீதியாக வாழ்ந்தவர்கள் தான் அங்கே இருக்க முடியும்.

சுயத்தின் அடிப்படையிலும் மாமிசித்தின் ஆசை இச்சைகளின் படியும் அனைத்தையும் தேடிவிட்டு கடைசியில் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்பதை கர்த்தரே ஒத்துக்கொள்ள மாட்டார். பத்திரிக்கையில் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று பிரிண்ட அடிப்பது..., மகா பெரிய பரிசுத்த பொய்.

## D for Dowry: வரதட்சணை

தனக்கு வயதாகிக் கொண்டே போகிறது என்று கவலைப்படும் இவர்கள் தனது எதிர்பார்க்கும் பத்து பாயிண்டுகளில் இருந்து இறங்கி வருவதே இல்லை.

இவர்கள் இறங்கி வருவதற்குள் இரண்டு வருடங்கள் ஓடி மறைந்து விடும். பக்தியைப் பார்க்காமல் பணத்தை பார்த்து திருமணம்முடிவு செய்தவர்கள். இன்றை தினம் அநேக வேதனைகளால் தங்களை உருவக்குத்திக் கொண்டு இருக்கிறதைப் பார்க்கிறோம்.

இவர்களுது உண்மையான ஆவிக்குரிய அழகு திருமண நேரத்தில் பணத்தைப் பற்றி பேசும்போது தெரிந்து விடும். உண்மை தானே? திருமணமும், அடக்க ஆராதனையும் ஒரு தேவ பிள்ளையின் ஆவிக்குரிய நாடித் துடிப்பை அளந்து பார்க்கும் சம்பவங்களாகும்.

ஆவிக்குரிய தகுதி, வேலை, படிப்பு, பணம், வயது தோற்றம் என ஆறுபடிகளில் விட்டுக் கொடுக்க நேர்ந்தால் ஆவிக்குரிய தகுதியை விட்டுக் கொடுக்கக் கூடாது.

தற்போதைய நிலவரம்படி அனைத்து ஆவிக்குரிய சபைகளிலும் பெண்கள் கூட்டமே அதிகம். ஆண்கள் அதிகம் இருப்பது இல்லை. அப்படியே இருந்தாலும் புதிதாக இரட்சிப்பின் அனுபவம் பெற்று வரும் வாலிபர்கள் மிக மிகக் குறைவு.

அப்படியே ஆலயத்திற்கு வருகிற வாலிப ஆண்பிள்ளைகளும் திருமணம் என்றவுடன் அம்மா பிள்ளையாகி விடுவார்கள். அம்மாவின் சொல் கேட்டுத் தான்நடப்பார்கள். ஏனென்றால் அவர்கள் தானே அடித்து பிடித்து பேசி வரதட்சணை வாங்கி கொடுக்கப் போகிறவர்கள்.

மீதம் உள்ள கொஞ்ச ஆண் பிள்ளைகளுக்கும் கண்டிப்பாக வேலை செய்யும் பெண்கள் தான் வேண்டும். அதிலும் அனைவருக்கும் ஆசிரியை வேலை செய்பவர் தான் ஆசை. இவர்கள் சுகபோகமாக வாழ பெண்கள் உழைத்து ஊதியம் கொண்டு வந்தால் தான் வாழவே முடியும் என்ற கருத்து தற்கால பெண் தேடும் ஆண் மகன்களுக்கு மனதில் பதிந்து இருக்கிறது.

பெரியவர்களால் நிச்சயிக்கப்படும் திருமணம் என்றால் எதன் அடிப்படையில் இதை முடிவு செய்கிறோம்? தேவ சித்தம் தேவ சத்தம் எதையும் கேட்பதும் இல்லை, பார்ப்பதும் இல்லை, அடிப்படை கோளாறு இங்கே தான் ஆரம்பிக்கிறது. பணத்தைப் பங்கு போடுகிறவர்கள். மனதை பங்கு போடுவது கூடாத காரியம். இது புரிவதற்குள் இரண்டு குழந்தைகள் பிறந்து விடும். அதற்குப்பிறகு குடும்பத்தில் சண்டைகளில் முகாம் நடத்த தொடங்குவார்கள். பணம் பத்தும் செய்யும். ஆனால் பணத்தினால் பாசத்தை செய்ய முடியாது.

குணம் உண்டா? குடும்பம் நடத்துவார்களா? தலை முறை தோறும் ஆசீர்வாதம் வரும்படி ஜெப ஜீவியம் இருக்கிறதா? வேத வசனம் மறக்காமல் நினைவு வைத்திருக்கிறார்களா? இது போல சிந்திக்காமல் துணையை தேட புறப்பட்டால் அதன் முடிவு நரகத்திற்கு போகவே வேண்டாம் ஏன் பூமியில் வாழும் வாழ்க்கையே நரகமாகிவிடும்.



## E for Education: கல்வி

படிப்பு என்பது பார்க்க வேண்டிய ஒரு குறிப்பு தான். ஏனெனில் திருமணத்தில் சரீரம் மட்டுமல்ல: ஆத்துமாவும் இணைய வேண்டும். ஆவியும் இணைய வேண்டும்.

ஆத்துமாவில் இருக்க வேண்டிய முதல் அறிவு எது? வேதம் சொல்லுகிறது..., பரிசுத்தரின் அறிவே அறிவு. ஆகவே தேவனைப்பற்றி அறிவும், அதை அடுத்து வேத அறிவும் அதே சமயம் உலக அறிவும் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்ப்பது பிற்காலங்களில் இதயங்கள் இணைய வழி வகுக்கும்.

பத்தாம் கிளாஸ் படித்த மனைவிக்கு டாக்டர் பட்டம் பெற்ற கணவனுக்கும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு தாழ்வு மனப்பான்மையும், அல்லது உயர்வு மனப்பான்மையும் வந்து அதனால் தீர்க்க முடியாத அளவு பிரிவும் வருவது உண்டு.

மனைவியோ வேத அறிவிலும் வேத வசனத்திலும் ஊறி திளைத்திருப்பார் கரைத்து குடித்தும் இருப்பார். கணவனுக்கோ புதிய ஏற்பாட்டுக்கும் பழைய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் கூட தெரிவதில்லை. இப்படிப்பட்ட மாட்டையும் கழுதையும் ஒன்றாய் ஓர் ஏரில் பூட்டினால் உழுவதற்கு பதிலாக காலமெல்லாம் அழுவதற்கு தான் நேரம் போகும்.

இக்காலங்களில் பெண்கள் அதிகம் படித்து விடுகிறார்கள். அதற்கேற்ற பையன் கிடைக்க மாட்டார். ஆகவே படிப்பை நிறுத்து என்று கட்டளைகள் பெண்களுக்க பிறப்பிக்கப்படுகிறது அது இந்த தேசத்தில் சாபக்கேடு.

கூடி வரும் முன் இருவருமே படிப்பும் பார்ப்பது நல்லது. ஆனால் முதல் படிப்பு, வேத படிப்பு, தான் இரண்டாவது உலக ஞானம், வாழ்க்கை கல்வி மூன்றாவது தான் கல்லூரி படிப்பு என்று இருந்தால் அப்புறம் சொல்லுங்கள் தித்திப்பாய் இருக்கிறதா? இல்லையா என்று.....

## F for Faith: விசுவாசம்

பெண்ணும் சரி; ஆணும் சரி; விசுவாசம் என்பது தேவனாலேயே பெற்று இருக்க வேண்டும், கனியாகிய விசுவாசம் வேறு; வரமாகிய விசுவாசம் வேறு; இரட்சிப்பின் விசுவாசம் வேறு; இதில் எந்த அளவுக்கு விசுவாசப் பரீட்சைக்குப் நின்று பிடிப்பார்கள் என்று பார்க்க வேண்டும்.

எதிர்காலத்தைப் பற்றிய தரிசனம் உடையவர்களாய் இருந்தால் எழுப்புதலுக்கு அந்த தம்பதியினரே காரணமாய் இருப்பார்கள். அதை விட்டு ஒருவருக்கு விசுவாசத்தில் பலம், இன்னொருவருக்கு அவிசுவாசத்தின் ஆவி; இப்படிப்பட்டவர்கள் இணைந்தால் குடும்பம் ஜான் ஏறினால் முழம் சறுக்கும்

மாறுப்பட்ட மத நம்பிக்கை; தெய்வ நம்பிக்கை; விசுவாசம் உள்ளவர்கள் இணைக்கப்படுவது கொடுமையிலும் கொடுமை; ஞானியிலும் ஞானியாம் சாலமோன் ஞானி; அவருடைய இருதயத்தையே அந்நிய தெய்வ வழிபாடு உள்ள வர்கள். சாயப்பண்ணிவி ட்டார்கள் என் றால் பார்த்துக் கொள்ளுங்களேன். ஆகவே திருமண த்திற்கும்பிறகு மாற்றிக் கொள்ளலாம். ஆண்டவர் மாற்றி விடுவார் என்று பொய்யாக உங்களை நீங்கள் ஏமாற்றிக் கொண்டால் அதற்கு ஒரு





நாள் கிரையம் கொடுத்து ஆக வேண்டும்.

ஆகவே தெய்வ நம்பிக்கை நகை போடுவார்களா? அதிகம் வெள்ளை போடுவார் களா? திருமணத்தில் உடைகள்தான் தேவை யா? திருமணத்தில் மாலைப் போட லாமா? தாலி கட்டலாமா? அல்லது தங்க சங்கிலி போடலாமா? தமிழ் கலாச்சாரம் தேவைதானா? இப்படி ஆயிரம் கேள்வி கள் அவரவர் விசுவாசத்தைப் பொறுத்து எழும்பும் அனைத்தையும் முன்னரே பேசிக் கொண்டு.... பின்னர் கைப் பிடிப்பது நல்லது. இல்லையென்றால் கரத்தை சேர்க்கலாம் இருதயத்தைச் சேர்ப்பது கூடாது காரியம்.

## G for Genelogy:குடும்பப் பின்னனி

குடும்பப் பின்னனியைப் பார்த்து இருவரும் முடிவு செய்வது நல்லது தாயை தண்ணீர் துறையில் பார்ததால் மகள் வீட்டில் பார்க்க அவசியம் இல்லை என்றார்கள். ஏன் அம்மாவைப் போலத் தான் பிள்ளைகளும் இருக்கும் தாய் சாப்பாட்டை மட்டும் ஊட்டுவது இல்லை..., கூடவே நல்ல குணங்களை யும், பண்பாட்டையும் ஊட்டி வளர்த்து இருக்க வேண்டும்.

வரவு செலவு செய்வதில்; நேரத்தை கையாளுவதில், உறவுகளை வளர்ப்பதில் ஒவ்வொருவரின் குடும்ப வளர்ப்பு மாற்றம் நன்கு புரியும், எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிலே பிறக்கை யாலே அது நல்லவராகவும் தீயவராகவும் அன்னை வளர்பதில் தான் என்று ஒருவர் பேசினார். அது உண்மைதானே!

தாய், தகப்பன், சகோதர சகோதரி உள்ள குடும்பத்தில், கூட்டு குடும்பத்தில் கூடிவாழும் மனப்பாங்கு இருக்கும். வரும் முன்னரே உறவுகளை வேறொடு அறுத்து; ஒட்ட விடாமல் எல்லாவற்றையும் வெட்டிவிடும் குணம் படைத்த குணவதி களும் உண்டு. இருவர் மட்டும் இணை வதில்லை இரு குடும்பமும் இணைந்து, இசைந்து செல்ல வேண்டும்.

திருமணத்திற்கு முன்னமே தனிக் குடும்பம் வைப்பது தான் முதல் வேலை என்று சொல்லி விட்டாலும்...., வேதத் தின்படி சரியானாலும்...., இரு குடும்பத் தினரும் மேற்பார்வையும், அரவணைப் பும் தேவைதானே!

இதைக் குறித்து பொண்ணும் மாப்பிள்ளையும் முன்னமே விசுவாசிப் பது நல்லது. அப்படியாகத்தான் இருக்க வேண்டும். அம்மா எல்லாவற்றிலும் தலையிடுவார்கள். இதற்கு சம்மதமா? என்று முன்னரே முடிவு செய்யுங்கள்.

பரலோகம் தான் தாய்வீடு மற்றபடி தாய் தகப்பன் வீட்டை மறந்தால் தான் ராஜா உன் அழகில் பிரியப்படுவார் என்று பிரசங்கித்தார் வயதான போதகர் பிள்ளைகளை பார்க்கும் முன் குடும்ப பின்னனி வளர்ப்பு முறை பார்ப்பது குடும்பத்தைக்கட்ட உதவும்.

## கடைசியாக ஒரு வார்த்தை

போலிதீர்க்கதரிசனம்; அதிகாலை ஜெப நேரத்தில் தரிசனம் கண்டேன்; கர்த்தர் காட்டினார். வேத வசனத்தில் வெளிப்படுத்தினார் என்கிற பித்தலாட் டம் பிடித்த மனிதர்களைக் கண்டால் பாளயத்துக்கு வெளியே கொண்டு போய் கல்லெறியுங்கள்.

திருமணம் என்பது உணர்ச்சிகளின் உருவம் அல்ல, உணர்வுகளின் சங்கமம்



என்னிடம் ஒரு வாலிபன் சொன்னான் பாஸ்டர் முழு பூரண சித்தத்திற்கு என்னை ஒப்புக் கொடுக்கிறேன் ஆனால் அந்த எதிர்விட்டு மேரியே தேவ சித்தமாகும் படி உபவாசித்து ஜெபியுங்கள் என்று...,

இதுபோல முன்னுக்கு, பின் பேசியே குழப்பும் குட்டி பிசாசுகளும் உண்டு. இதுகள் குட்டிச்சுவராவதும் மட்டும் இன்றி; மற்றவர்களையும் கவிழ்த்து விடும்.

ஆகவே இதிலும் கவனம்.

இன்னும் எழுதவேண்டுமானால் ""G" க்கும் பிறகும் "Z"வரை எழுதலாம், வசனத் தெளிவும், கடைசி வரை ஒரே சபையிலே உறுதியாய் நின்று பிடித்தவர்களை தேவன் நேர் வழியாய் நடத்துவார். அதுவே நிச்சயம்.

உங்கள் விலா எலும்பு உங்களுக்கே கிடைக்க வாழ்த்துகிறேன். உங்கள் ஆண்டவரே (சாராள் அழைத்தது போல) உங்களை ஆளும்படி ஆசிர்விக்கிறேன்.

*-எலியேசர்.*

**உதவி செய்கிறோம் உங்களுக்கு**

**Glory Marriage Bureau**

முதல் உங்கள் முகவரி: தொலை பேசியிலோ தபால் அட்டையிலே தெரியப்படுத்துங்கள். நாங்கள் Form-யை அனுப்பி தருவோம்

தாங்கள் நிரப்பி இரண்டு Full size Photo-வும் பதிவுக் கட்டணமாக ரூ.200/- அனுப்பித் தாருங் கள்.

நேரில் வருகிறவர்களும் புகைப் படம் மறவாமல் எடுத்து வாருங்கள்

எங்களிடம் பதிவு செய்த பிறகு மகிமையின் செங்கோல் பத்தி ரிக்கையில் விளம்பரம் தருகிறோம்.

மற்ற திருமண மையங்களின் Formகளையும் முகவரிகளையும் தங்களக்கு தந்து அவர்களிடம் பதிவு செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

மற்ற பத்திரிக்கையில் வெளி யிட்டுள்ள Alliance விவரங்களை வரு பவர்களிடம் காட்டுகிறோம்.



*Bride And Bridegroom*

* *School or College Tc*
* *Birth Certificate*
* *Aadher Card*
* *Pan Card*
* *Driving Licence*
* *Voter ID*
* *Smart card xerox*

*Baptism Certificate Must*

* *Three Invitation*
* *Three Passport Size Photos*
* *Two Sides Witnesses*
* *Aadher Card Xerox*
* *Bride And Bridegroom*
* *Father Adhar card Xerox*

*All Details One Side Colour Xerox.*
*And Two set White and black xerox*

# திருமணத்தில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்க்க திருச்சபைகளின் பங்கு என்ன?



1. ஒவ்வொரு சபையிலும் (அவர் (வயதில், அனுபவத்தில், ஆவிக்குரிய ஸ்திரத் தன்மையில், ஆத்தும பாரத்தில் நிறைந்தவராக இருத்தல் அவசியம்) ஒருவரை விவாகம் ஒழுங்கு செய்யும் ஊழியத்திற்காக ஏற்படுத்த வேண்டும். அதை சபை மேய்ப்பர் மேற் பார்வை யிடலாமே தவிர, இதில் முழு மையாக ஈடுபட்டால் சபை ஊழியத்தில் சங்கடங்கள் உண்டாகும்.

2. இப்படி ஏற்படுத்தப்படும் ஊழியர் ஓரள வுக்காவது பெண்பிள்ளை வீட்டாரின் விபரம் தெரிந்தவராக இருத்தல் அவசி யம்.

3. ஒவ்வொரு சபையிலும் உள்ள இப்படிப் பட்ட விவாக சம்பந்தப்பட்ட மூப்பர்கள், தங்களுக்குள் தலைவரை தேர்ந் தெடுத்து மாதம் ஒரு முறை ஒரு சபை யில் கூடி கலந்து பேசி தீர்மானித்தால் கருத்து பரிமாற்றங்களால் சுபகாரியங் கள் சுலபமாக்க வழியுண்டு.

4. இல்லையெனில் இப்போது இருப்பது/ கம்ப்யூட்டர் உலகம், பெரிய பிரதான சபைகளில் கம்ப்யூட்டரில் தகவல்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

5. ஒரு சபைக்கு ஒரு சபை கணிணியிலே பொருத்தம் பார்த்து (E-mail)இ–மெயில் அனுப்பி வைத்தல் அவர்களே பதில் அனுப்பும்படி செய்யலாம்.

6. சென்னையில் இயேசு அழைக்கிறார் அலுவலகத்தில் தகவல்களை கம்ப் யூட்டரில் வைத்து இருக்கிறார்கள். இது போல சைதாப்பேட்டையில் உள்ள AG சபைப் புரசைவாக்கத்தில் உள்ள ACA சபை இரண்டும் கம்ப்யூட்டரில் பதிவு செய்து இணைப்புகள் கொண்டு வரும் போது மற்ற பெரிய சபைகளும் இதனு டன் கம்ப்யூட்டரில் இணைந்து கொண் டால் ஆசீர்வாதமாக இருக்கும்.

7. இப்படியாக விவாகத்தின் காரியங் களுக்காவது சபைகளுக்குள் ஒரு ஐக்கியம் ஏற்பட்டால் அது மிகப் பெரிய மறுமலர்ச்சியாக மாறுமே!

8. இதுபோல் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தலைமை சபை கணிணியில் தகவல்கள் பதிவு செய்தால் பரிமாற்றங் களுக்கும் வசதியாக அமையும், கால தாமதங்கள் தவிர்க்கப்படும். பணவிர யம் மிச்சப்படும்.

9. ஆவிக்குரிய திருமணத்தை எப்படி நடத்துவது என்ற பொதுவான ஒழுங்கு இருந்தால் எவ்வளவோ பிரச்சனை களை தவிர்க்க முடியும். அப்படி இல்லா தது பெரிய குறை.

10. ரோமன் கத்தோலிக்க திருச்சபை அசெம்பிளி ஆப் காட். சிலோன் பெந்த கொஸ்தே போன்றவவைகளில் அதற் கென திருச்சபைகளின் வழி முறைகள் இருப்பது போல் மற்ற ஆவிக்குரிய திருமணங்களில் இருப்பது இல்லை. இதனால் எத்தனை சண்டைகள்? எவ் வளவான கருத்துவேறுபாடுகள்? இவர் கள் சரி இல்லை என அவர்களது புகார். அவர்கள் சரி இல்லை என இவர்களது புகார்.

11. திருமண மண்டபத்தில் வந்திருக்கும் வெளி உலக மக்கள் ஏளனமாக சிரிக் கும் சிரிப்பு! தேவ நாமம் தூஷிக்க காரணமாகிறது. இந்நிலையில் இந்துவி லிருந்து R.C.யிலிருந்து இரட்சிப்படை வது பெரிய தேவனுடைய ஈவு. அதன் பிறகு இவர்களுக்கு மாப்பிள்ளை பெண் கிடைப்பது அதை விட பெரிய காரியம். இதற்கு பயந்துகொண்டே அநேகர் இரட்சிப்பின் வழிக்குள் வரா மல் போகிறார்கள்.

12. சரி! அது அமைந்து ஒரு வழியாக திருமணம் நடத்தலாம் என்றால் ஏகப்பட்ட சிக்கல் இருக்கிறது. நகை, பூ, புடவை, தாலி, பைபிள், சீர் வரிசை, திருமணம் முடிந்து பெண்வீட்டிற்கு முதலில் செல்வதா? மாப்பிள்ளை வீட்டிற்கு முதலில் செல்வதா? என ஏராளமான கேள்விகள்

13. எனவே இதைக் குறித்து முன் கூட்டியே பேசி முடிவு செய்யாமல் மேடைக்கு போகவே வடாது. எதற்கு எடுத்தாலும் மூன்று பெர்க்மான்ஸ் பாடல், இரண்டு ஜெபம், ஒரு செய்தி என்று முடிக்கும் பாரம்பரிய பாணிகளை மாற்ற வேண்டும்.

14. ஒரு திருமணத்தில் ஒப்புக்கொடுத் தீரைய்யா என்ற பாடலை பாடிக் கொண்டு இருந்தார்கள் பார்க்கவும் கேட்கவும் பரிதாபமாக இருந்தது. பாதர் பெர்க்மான்ஸ் திருமணத்திற்கு ஏற்றார் போல் ஒரு ஐந்து பாடல்கள் புதிதாக இயற்றினால் இந்த பிரச்சனை தீரும்.

15. ஆவிக்குரிய சபைகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதன் முறைமைகளை கலந்து பேசி தேவ வசனத்திற்கு ஏற்ப ஒரு பொதுவான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அடுத்த கட்ட பிரச்சனையும் தீரும். மற்ற கிறிஸ்தவ சபைகளுக்கு இருப்பது போல் இக்கால பூரண சுவிசேஷ சபை களும் ஒரு வழி முறைகளுக்கு வந் தால் திருமணங்கள் திருப்தியாக அமை யும். திருமணங்களில் தீப்பொறி விழு வதை தடுக்க முடியும்.

16. எந்த ஐக்கியத்திலும் இல்லாமல் நாங் களே ராஜாக்கள் நாங்களே மந்திரிகள் என சொல்லிதனிப்பட்ட சுயாதீன சபை களாக இயங்குகிறவர்களிடம் இந்த பிரச்சனை கூடுதலாக உள்ளது.

17. அடுத்து திருமணங்களை பதிவேடு களில் பதிவு செய்வது என்பதும், அதற் கான லைசனஸ் பெறுவதும் சுயாதின சபைகளின் அஸ்திபார பணி

18. சரி போகட்டும்! பிரச்சனைகளை பேசிப் பேசி சோர்ந்து போவதைவிட நம்மால் முடிந்த சிறு வெளிச்சத்தை ஏற்றினால் எத்தனை பெரிய இருளும் அகன்று போகும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகவே அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் அர்ப்பணிப் போம். அவரே அனைவருக்கும் ஆறு தல் செய்கிறவர்.

19. பரலோகத்தில் சித்தம் செய்யப்படுவது போல பூமியிலே செய்யப்பட வேண்டு மாய் இருந்தால் அதற்கேற்ற வழிமுறை கள் அமைந்தால் தான் முடியும்.

20. மணமகனின் வீட்டார், மணமகளின் வீட்டார், திருச்சபையின் மூவரின் ஒருங்கிணைந்து ஆவிக்குரிய செயல் கள் பூமியிலும் பர லோகத்தின் குடும் பங்களைக் கட்டுவதாய் அமைவதாக!



# ஆடம்பரத் திருமணங்கள் அவசியமா?

வாழ்க்கையின் சந்தோஷமான நேரத்தையும், சங்கடமான சமயத்தையும் பகிர்ந்து கொள்ள ஒரு வாழ்க்கைத்துணை அவசியம் தேவை.

அதற்கான உடன்படிக்கை செய்து, ஊரும், உறவும், நட்பும் கூடி வாழ்த்த நாம் நடத்தும் திருமணங்களுக்கு ஆடம்பரம் தேவை தானா? ஆண்டவராகிய இயேசு சொன்னார்.

அன்றியும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும் போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம். அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும்.

நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும, ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் அழைப்பாயாக.

அப்பொழுது நீ பாக்கியவானயிருப்பாய்; அவர்கள் உனக்கு பதில் செய்ய மாட்டார்கள். நீதிமான்களின் உயிர்தெழுதலில் உனக்கு பதில் செய்யப்படும் என்றார். லூக்கா 14:12,13,14

ஆக..., திருமண செலவை இரண்டாயிரத்துக்கும் செய்யலாம். இரண்டு லட்சத்துக்கும் முடிக்கலாம். ஏன் இரண்டு கோடிக்கும் நடத்தலாம்.

சமீபத்தில் ஒரு திருமணம் இல்லம் சென்றிருந்தேன். அவர்கள் அச்சடித்த பத்திரிகை ஒன்றே இருநூற்று ஐம்பது ரூபாய் என்றார்கள். அலங்கார விளக்குகள், ஆட்கள் சிரிக்க வைக்கும்படி ஆடம்பர கச்சேரிகள் என அமர்க்களப்படுத்தி இருந்தார்கள்.

மட்டுமா? விளக்குக் கம்புகளில் எல்லாம் வரிசையாக டியூப் லைட் கட்டி இருந்தார்கள். இது ஒரு சோறு பதம்! இப்படிப்பட்ட ஆடம்பரங்கள் மனிதனுடைய வண்கண்ணுக்கு காரணமாகி விடுகிறது.

சம்பாதித்தவன் செலவு செய்கிறான். இதிலே ஏன் பொறாமை? என்று சிலர் கேட்டகக்கூடும். நிச்சயம் இல்லை. எளிமையை பற்றி பிரசங்கிக்கும் தேவ ஊழியரின் திருமணங்களையும் அவர்களது பிள்ளைகளின் திருமணமும் சமுதாயத்தில் சாட்சி கேடாக அமைகிறது. இதில் யாருக்கு யார் மாதிரியாக இருப்பது என்றில்லாமல் எல்லாமே ஒரு மாதிரியாகி விடுவது தான் இன்றைய அவலம்.



எளிமையால் மட்டுமே இதயத்தை ஈரப்படுத்த முடியும். ஆடம்பரம் அகந்தையை குடியேற்றுகிறது.

பெரும்பாலான பணக்காரர்களாக விளங்கும் மேல் மட்டத்தினரில் அநேகர் தங்கள் வீட்டுத் திருமணத்தை எளிமையாக செய்கின்றனர். அதே போல் கீழ் நிலையிலுள்ள ஏழைகளும் சிக்கனமாகத் தான் முடித்துக் கொள்ள வேண்டும். இதில் நடுத்தர குடும்பத்தினர் தான் கௌரவம் என்று சொல்லிக் கொண்டு லட்சக்கணக்கில் (கடன் வாங்கி) செலவு செய்து ஆடம்பரத்தை பறைசாற்றுகின்றனர் பின்னர் பரிதபிக்கின்றனர்.





# ஒரு மனமா? இருமனமா? திருமணமா?

திருமணத்தில் திட்டமிடுதல் (planning) என்பது அதிக அவசியமானது. இரு வீட்டாரும் உட்கார்ந்து பேசி ஒரு நோட்டு புத்தகத்தில் எழுதி வைத்து செயல்படுவது முக்கியமானது.

நிச்சயதார்த்தம், திருமணம் என்று போகும் முன்னர்ஒரு ஆயத்தக் கூட்டம் வைத்து இருவீட்டாரும், அவர்களது ஊழியகாரர்களும் பேசி பல விஷயங் களை ஒருங்கிணைக்க வேண்டும். இதை செய்தால் கடைசி நேர குழப்பங்களை தவிர்க்கலாம்.

பத்திரிக்கை போடும்போது யார் யார் பேர் போட வேண்டும்? யாருக்கு தர வேண்டும், எத்தனை பத்திரிக்கையை அடிக்க வேண்டும் அல்லது இரு வீட்டார் அழைப் பா? என்று பேசி முடிவு செய்து எழுதிக் கொள்வது நல்லது.

ரேஷன் கார்டு பெயர்ப்பட்டியல் போல அதிக பெயர்களும் தேவை இல்லாதது. அதே சமயம் திருமணம் நடத்துபவர்களுக்கு வாழ்த்து சொல்ல வசதியாக: முகவரி, தொலைபேசி, மின் அஞ்சல் போன்றவை போடுவது நல் லது. ரொம்ப இலகுவாக என்று நினைத்து விபரங்களை தெளிவாக தராவிட்டால் வாழ்த்து சொல்லவும், நேரத்துக்கு வந்து சேரவும் இயலாமல் போகிறது.

திருமணத்திற்காக பதிவாளர் அல்லது பாஸ்டர் கேட்கும் அரசாங்கத்திற்கான சான்றிதழ்களை முன்னமே ஏற்பாடு செய்தல் நலம். உங்கள் வயது, இருப்பிடம், ஆவிக்குரிய தகுதி, திருமண அறிக்கை வாசிப்பதற்கான ஆதாரங்கள் என அனைத்திற்கும் தற்போது சான்றிதழ்கள் தேவைப்படுகிறது.

சாப்பாடு எல்லா திருமணத்திலும் அதிக முக்கியத்துவம் பெறுகிற குறிப்பு. ஆகவே என்னென்ன சமைக்கப் போகிறீர் கள்? யார் பரிமாறுவார்கள்? எத்தனை பேரை எதிர்பார்க்கிறீர்கள்? ஓட்டலில் ஆர்டர் கொடுக்கிற எண்ணம் உண்டா?

எழுதாத கணக்கு அழுதாலும் தீராது என்பார்கள். ஆகவே துணிகளுக்கு ஆகும் செலவு, போட்டோ, வீடியோ, மண்ட பம், ஊழியக்காரர்களுக்கு தரும் காணிக் கை, சாப்பாடு, பத்திரிக்கை என வரிசை யாக செலவு விபரத்தை எழுதி பணத் திற்கான ஏற்பாடுகளையும் முன் கூட்டி யே செய்ய வேண்டும்.

திருமணங்களில், சொந்த உறவுகளால் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க அவர்களது எல்லையை ஏற்கனவே புரிய வைத்து விட வேண்டும். கல்யாணத்திற்கு வந்தவுடன் தங்கள் சுய கௌரவத்தை நிலை நாட்ட ஒவ்வொருவரும் முயற்சிப்பது வேதனையாக முடியும்.



திருமணம் வரவேற்பு நடக்கும் இடங்களில் மழை வந்து

விட்டால், கரண்ட் நின்று விட்டால், மாற்று ஏற்பாடுகள் உண்டா? என முன்னமே அவைகளை ஆயத்தத்துடன் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாம் முடிந்தபின்னர் இவர்தான் திருமணத்திற்கு காரணம். இவருடைய தவறான வழிநடத்துதல் என் வாழ்வு இப்படி ஆனது என்று யார் ஆரம்பத்தில் ஆரம்பித்து வைத்தார்களோ அவர்களை காலமெல்லாம் குறை சொல்வது குழந்தைத் தனமானது இதற்கு பயந்துக் கொண்டே யாரும் திருமணத்திற்கு பொறுப்பு எடுக்க தயாராக இருப்ப தில்லை.



## திருமணம் நடப்பதற்கு முன் அலுவலகத்தில் மணமகன், மணமகள் இருவீட்டாரும் தரவேண்டிய சான்றிதழ்கள்

- ◈ வயது சான்றிதழ்/(School Transfer Certificate. Passport, Driving Licence - Xerox Copy)
- ◈ இருப்பிட சான்றிதழ்/Residence Proof (Ration Card, Election ID Card- Xerox Copy)
- ◈ ஞானஸ்தான சான்றிதழ்/Baptism Certificate
- ◈ திருமணத்திற்கு தடையில்லை என்ற சான்றிதழ்/No Objection Certificate
- ◈ நிச்சயதார்த்தம் அழைப்பிதழ்/Betrothal Certificate
- ◈ சபையில் மூன்று அறிவிப்புகளுக்கு பின்புள்ள கடிதம்/Letter after Banns
- ◈ பெற்றோர்/பாதுகாவலரின் விண்ணப்ப படிவம்/Form No.M/2- (Parent / Guardian's Application)
- ◈ அறிமுகம் செய்பவரின் கடிதம்/Recommendation Letter
- ◈ சபையில் அங்கத்தினர் சான்றிதழ்/Church Membership Letter
- ◈ திருமண அழைப்பிதழ் 2 நகல்கள்/Marriage Invitation 2 Copies

| | | |
|---|---|---|
| A for Age | : | வயது |
| B for Beauty | : | அழகு |
| C for Caste | : | ஜாதி |
| D for Dowry | : | திருமண செலவு |
| E for Education | : | படிப்பு |
| F for Faith | : | விசுவாசம் |
| G for Genealogy | : | குடும்ப பின்னணி |





# திருமண காரியங்களைத் திட்டமிடுதல்

**திட்டமிட தவறுகிறவர்கள் தவறு செய்ய திட்டமிடுகிறார்கள்**
**எனவே கவனமாய் திட்டமிட தொடங்குங்கள்.**

### 1. ஆயத்த கூட்டம்

★ எந்த தேதியில் ★ எந்த நேரத்தில் ★ யார் யார் அழைக்கப்படுகிறார்கள்
★ விரும்பினால் இரு வீட்டாரும் சேர்ந்து (சபை / வீட்டார் / மற்ற வீட்டார்)
★ சாப்பாடு உண்டா ★ மற்ற விபரங்கள்...

### 2. திருமணம்

★ ஆலய நிகழ்ச்சிகள் ★ ஆலயம் எந்த இடத்தில் ★ அந்த இடத்திற்கு அலங்காரம் ★ இசை தனிப்பட்ட பாட்டுப் புத்தகம் ★ ஆராதனை முறைமை ★ பாடகர் குழு ★ கரண்ட், பி.ஏ ஸிஸ்டம் ★ எமர்ஜென்ஸி லைட் உண்டா? ★ வரவேற்புக் குழு இருவர் ★ இருவருக்கும் புது வேதாகமம் வாங்கி விட்டீர்களா? ★ அலுவலகத்திற்கு தரவேண்டிய சான்றிதழ்களைத் தந்து விட்டீர்களா?

### 3. திருமண வரவேற்பு வைபவம்

◈ மண்டபம் ◈ சாப்பாடு ஒத்துக் கொள்கிறார்களா? ◈ ஸ்டேஜ் பின்புற அலங்காரம் ◈ கேக் சொல்லிவிட்டார்களா? ◈ கேக் வெட்ட கத்தி உள்ளதா? ◈ அங்கு யார் பேசுவார்? ◈ மைக் வசதி ஏற்பாடு ◈ வரவேற்புக் குழு இருவர் ◈ சீரியல் செட் தேவையா? ◈ ஜெபம் செய்தி கொடுக்கும் வேளையில் ஜனங்களை அமைதியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள ஆட்களை நியமிக்க வேண்டும்

### 4. பத்திரிக்கை

★ எந்த மாடல்? ★ எந்த பிரஸ்? ★ யார் யாருடைய பெயரை போடுவது? ★ நேரில் பத்திரிக்கை கொடுக்க வேண்டியவர்களின் பட்டியல் ★ தபாலில் அனுப்ப வேண்டியவர்கள் பட்டியல் ★ எத்தனை பத்திரிக்கை அச்சடிக்க வேண்டும் ★ இருவீட்டார் அழைப்பா, ★ பாடல்களும் நடத்தும் விதமும் அடங்கிய பேப்பர் முன்கூட்டியே பிரிண்ட் செய்ய வேண்டும். எவ்வளவு கூலி?

### 5. சாப்பாடு

⁂ என்ன என்ன சமைக்கப் போகிறீர்கள்? ⁂ யார் பரிமாறப் போகிறார்கள், யார் சமைக்கப் போகிறார்கள், எவ்வளவு கூலி ⁂ எத்தனை பேரை எதிர்பார்க்கிறீர்கள்? ⁂ எத்தனை பேருக்கு சமைக்க வேண்டும்? ⁂ காய்கறி யார் வாங்கப் போகிறார்கள்? ⁂ மளிகைப் பொருட்கள் யார் வாங்கப் போகிறார்கள்? ⁂ ஓட்டலில் ஆர்டர் கொடுக்கிற எண்ணம் உண்டா?

## 6. துணிகள்

☞ மணமகன், மணமகள் திருமண ஆடைகள் ☞ மணமகளுக்கு அலங்காரம் செய்பவர் யார்? வரறேப்பு உடைகள், அப்பா, அம்மா, உடன் பிறந்தவர்களுக்கு துணி விவரம்.

## 7. போட்டோ, வீடியோ

• யார் எடுக்கப் போகிறார்கள்? • போட்டோவுக்கு எத்தனை பிலிம் ரோல்?
• எத்தனை வீடியோ கேசட்? • மிக்ஸிங் உண்டா?
• முன்கூட்டியே ஒரு முறை அவர்கள் பாஸ்டரை சந்திக்கணும்

## 8. திருமண வேலைகளை பொறுப்பேற்பவர்கள் யார் யார்?

* பத்திரிக்கை யார் கொண்டு போய் கொடுப்பார்கள்? * ஆலயத்திலும் மண்டபத்திலும் வரவேற்பதற்கு யார் முன்பாக நிற்பார்கள்? * வரவேற்பில் டிராக்ட்ஸ் கொடுக்கலாமா? * வண்டி வசதிக்கு பொறுப்பு யார்?
* அன்பளிப்புகளை யார் எழுதுவார்? * கார், ஆட்டோ, ஸ்கூட்டர் போன்ற வாகன வசதிகள் உண்டா? * சாட்சி கையெழுத்து போடுபவர்கள் யார் யார்? (பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் 2 சாட்சிகளின் முகவரியை முன்கூட்டியே எழுதி அலுவலகத்தில் தரவும்)

## 9. மொத்த செலவுகள்

☛ யார் யார் எவ்வளவு தருகிறார்கள்? ☛ கையிருப்பு பணம் எவ்வளவு?
☛ தேவைப்படும் பணம் எவ்வளவு? ☛ அலுவலகத்திற்கு தர வேண்டிய பண்ம் ரூ.
☛ திருமண ரிஜிஸ்தருக்கு ரூ. ☛ சபைக்குரிய காணிக்கை ரூ. ☛ திருமணம் நடத்தி வைக்கும் பாஸ்டருக்கு காணிக்கை ரூ. ☛ ரீத்வேல், மணப்பெண் அலங்காரத்திற்கு ரூ. ☛ திருமண பாடல் பாடுபவர்க்கு காணிக்கை ரூ. ☛ வெளியிலிருந்து வருகின்ற மற்ற பாஸ்டருக்கு காணிக்கை ரூ.

## 10. என்னென்ன செலவுகள்

▣ ஆயத்தக் கூட்டத்திற்குச் செலவு ▣ ஊழியருக்கு காணிக்கை ▣ சாப்பாடுச் செலவு ▣ ஆலய அலங்கார செலவு ▣ இசைக் கருவிகளுக்கு ▣ பாடகர் குழுவிற்கு ▣ பி.ஏ.ஸிஸ்டம் ▣ கலந்துக் கொள்ளும் பாஸ்டர்களுக்கு காணிக்கை ▣ பத்திரிக்கை வாங்குவதற்கு, பிரஸ்ஸீக்கு ▣ வெளியூர்களில் பத்திரிக்கை கொடுக்க சென்று வரும் செலவு ▣ பாடல் ஆராதனைக்குரிய பேப்பர் அச்சடிப்பதற்கு ▣ சமையற்காரர்களுக்கு கூலி ▣ பாத்திரங்களுக்கு கூலி ▣ துணிகள் வாங்குவதற்கு, தைப்பதற்கு ▣ போட்டோ, வீடியோ செலவுகள் ▣ மேரேஜ் ரிஜிஸ்டர் வாங்குவதற்கு ▣ மூன்று முறை ஓலை வாசிப்பதற்கு ▣ மண்டப வாடகை ▣ பைபிள் வாங்குவதற்கு ▣ கேக் செய்வதற்கு.



## திருமண தகவல் நிலையங்களின் முகவரிகள்

1. **Pastor. Sam Sundaram**
Apostolic Christian Church,
Marriage Bureau,
No.26, Shanmugarayan Street,
Purasawalkam, Chennai - 07.
☎ 26622775, 26625583

2. **Pastor. Mohan**
New Life A.G. Church
Marriage Bureau,
No.191, Anna Salai,
Little mount, Saidapet
Chennai 600 015.
☎ 2235 3100, 2235 3101

3. **Dr. D.G.S. Dhinakaran**
Jesus calls, Marriage Bureau
No.16, Greenways Road,
Chennai - 600 028.
2495 1122

4. **Pastor. Edison**
The Hebron Church,
Marriage Bureau
New No.17, Old No.7
Pushpa Nagar Main Road,
Nungambakkam, Chennai - 34
☎2817 2020
Cell : 98410 82644

5. **Rev. Charles Aaron**
Rose of Sharon A.G. Church
Marriage Bureau,
No.17-18, Zakariya Colony,
1st Street, Kodambakkam,
Chennai - 600 094.
☎ 2472 5599

6. **Mr. Arun**
Jemima Marriage
Communication Centre,
No.110, Cementery Road,
Washermenpet, Chennai - 21.
☎25246686, 9444878042

7. **Mrs. Anitha**
Hosts of the Lord
No.15/16, First Floor,
Santham Colony,
Anna Nagar West Extn,
Chennai - 600 101.
☎ 2620 3864

8. **Mrs. Sheela Thangaraj**
Lovely Matrimonial Service
No.388, P.H.Road,
(Hotel Brindavan Upstairs)
Opp. Anna Arch,
Anna Hospital,
Arumbakkam, Chennai - 106.
☎ 2501 6725.

9. **Mr. Arthor Masilamani**
A6, Marble
Archapartmnet -2 (17)
Valliammal Road, Vepery,
Chennai - 600 007.

10. **Mrs. Roy David**
Marriage Bureau No.1A,
Fenton Court,Balar Kalvi Avenue,
Vepery, Chennai 600 007
☎ 2642 7084

11. **Good News Marriage Bureau**
Bethel Plot No.6/, 2nd Avenue
(near tonakela camp)
Santhosh Nagar, Ayapakkam
Chennai - 600 077.

12. **Dinathoothu**
Marriage Bureau
No.196, R.K. Mutt Road,
Mandevli, Chennai - 600 028.
24938161, 24934863

13. **Agapa City Church**
21/14, Kailasa Mudali Street,
Tordiarpet. Chennai - 600 081.
25960818.

## கல்யாண கவிதைகள்

♥ கூப்பிடும் தொலைவில் நீ
என்ன சொல்லிக்
கூப்பிடுவது என்ற
தயக்கத்தில் நான்
தெரிந்து கொள்ளும் ஆசை
திருமணமாகிப் போனது

♥ ஒவ்வொரு நாளும் சூரியன்
உதிக்கும் மறையும்
என்பதே பொய்
கல்யாணம் ஆகாதவர்களுக்கு,

♥ கடவுளிடம்
மனு ஒன்றை அளித்தேன்
பரிசீலிக்கப்படவில்லை
இன்று வரை
ஜாதியும்,
வரதட்ணையும் தான்
திருமணத்தை
நிச்சயத்துக் கொண்டு
இருக்கின்றன.

♥ என் மனைவி ரொம்ப டிவி
பார்க்கிறாங்க...,
அதனால் என்ன நிம்மதி தானே
பவர்கட் ஆனாலும்
பார்க்கறாளே! என்னது?
மெழுகுவத்தி வச்சுகிட்டு!

♥ புருஷன் வீடுக்கு வந்து
மாதங்கள் பல ஓடிவிட்டன
பொருட்களை
ஏற்றி வந்து விட்டேன்
அப்போதே
வராமல் அடம் பிடித்துக்
கொண்டிருக்கும்
இந்த மனசைத் தான்
எப்படிக் கொண்டு வருவதெனத்
தெரியவில்லை.....,

♥ இறங்குவதற்கு
முந்தைய நிறுத்தத்தில்
கிடைக்கிறது இருக்கை!
என்ன லாபம்?

♥ முடி கொட்டிய பிறகு
சீப்பு கிடைத்து
என்ன லாபம்?

♥ வயதானபிறகு
வாழ்க்கை துணை
வந்து தான்
என்ன லாபம்?

***பதினோராம் மணி ஊழியங்கள் – ஒரு கிறிஸ்தவ அறமத நிறுவனமாகும்.***

- அரசாங்கத்தில் 1994–ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது
- இந்த ஸ்தாபனத்தின் கீழ் மகிமையின் தேவாலயம் என்கிற சபை ஊழியங்கள், குளோரி வேதாகமக் கல்லூரி, குளோரி திருமணதகவல் நிலையம் போன்ற ஏழு விதமான ஊழியங்களை இயக்கிவருகிறது.
- இயன்றவர இரட்சகர் இயேசுவை இந்தியாவிற்கு அறிவித்து..., ஒவ்வொரு மனிதரையும் தேவனின் பிள்ளைகளாய் விசுவாசிகளாய் சீஷர்களாய் ஊழியராய் உருவாக்கி உன்னத வருகைக்கு ஆயத்தப்படுத்த தன்னை அர்ப்பணித்துள்ளது.
- "பதினோராம் மணி ஊழியம்"
- இவ்வூழியத்தில் நீங்களும் இணையலாம் பிறரையும் இணைக்கவும் நாம் ஒருமித்து கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்துவோம்! அல்லேலூயா!





# மணமக்களை வாழ்த்த – வார்த்தைகள்

- ஆபிரகாம் -சாராளைப் போல அன்பிலே கட்டப்பட்டு திகழும் குடும்பமாய்.
- ஈசாக்கு – ரெபேக்காளைப் போல ஓடி விளையாடி திகழும் குடும்பமாய்
- யாக்கோபு – ராகேலைப் போல நேசத்தில் நினைத்திருக்கும் நேசக் குடும்பமாய்
- யோசேப்பு –ஆஸ்நாத்தைப் போல உயர் பதவிகள் பெற்று சாதிக்கும் குடும்பமாய்
- ஏபேருரும் -யாகேலும் போல் எதிரியை (சாத்தானை) வீழ்த்தும் குடும்பமாய்
- போவாஸ் - ரூத்தைப் போல ஆசீர்வதிக்கப்பட்ட பெருமை மிகு குடும்பமாய்
- எல்க்கானா – அன்னாளைப் போல் அன்னியோன்யம் மிகுந்த குடும்பமாய்
- தாவீது – அபிகாயிலைப் போல விட்டுக் கொடுத்து வாழும் குடும்பமாய்
- மனோவாவும் -அவன் மனைவியைப் போல் ஆண்டவரிடம் கேட்டு செயல்படும் குடும்பமாய்
- ஆகாஸ்வேரு – எஸ்தர் போல ஜெயம் பெற்று சாதனை படைக்கும் குடும்பமாய்
- யோசேப்பு – மரியாளைப் போல ஆசீர்வாதத்தை அளவில்லாமல் பெறும் குடும்பமாய்
- ஆக்கிலா – பிரிசில்லாள் போல் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஒப்பற்ற குடும்பமாய்

**மணமகனும் - மணமகளும் - ஜீவனுள்ள சாட்சிகளாய் இப்படிபட்ட குடும்பங்களின் சிறப்பை பெற்று வாழ வாழ்த்துகிறோம்.!!**

